சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.98/2016

பெயர் திருமதி. விஜயா நாள் 23.02.2026
க/பெ.இராஜாராம்

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) எனக்கு 1986 ல் திருமணம் ஆனது. திருமணம் ஆன முதல் பண்ருட்டியில் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். பங்காரு கிரையம் கொடுத்து 18 வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்ததன் காரணம் என்னவென்றால் அவர் கிரையம் கொடுத்ததே எனக்கு தெரியாது. வழக்கு சொத்தைத் தவிர்த்து வேறு சொத்துகளை அனைவரும் பிரித்துக் கொண்டார்கள். அந்த சொத்துகளில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதில் பாகம் கொடுத்து விட்டார்கள். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் புல எண் 108/5, 108/4 ஆகிய சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் கணவரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கிருஷ்ணனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கிருஷ்ணனுக்கு 2 ஆண், 2 பெண் மக்கள். அந்த இரண்டு பெண் மக்களை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை.

2) கிருஷ்ணன் பெயரில் வழக்கு சொத்துக்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நத்தத்தில் கிருஷ்ணன் பெயரில் எவ்வித ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை. நத்தம் சொத்துகளைப் பொறுத்து அனுபவத்தில் இருந்தால் தான் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். எந்த புல எண்ணை பங்காரு 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் புல எண்.108/4. அப்போது பங்காரு பெயரில் தான் பட்டா என்றால் தெரியும். பங்காரு அவருடைய தனிப்பட்ட சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், அதில் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

3) பங்காருவின் வாரிசுகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் பங்காருவின் வாரிசுகள் தான் உரிமை கோர இயலும் என்றாலும், நான் உரிமை கோர இயலாது என்று சொன்னாலும் சரியல்ல. பங்காருக்கு அரசாங்கத்தால் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட சொத்து என்றாலும், அதில் நான் உரிமை கோர இயலாது என்றாலும் சரியல்ல. நாங்கள் எந்த காலத்திலும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணனின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு 2வது இன சொத்தைப் பொறுத்து நான் பாகம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.